AEGON Life

# Notice of Assignment

**(Under Section 38 of the Insurance Act, 1938)**

பாலிசிதாரரின் பெயர் : ____________________

பாலிசி எண் . : ____________________

தேதி : ____________________

தொலைபேசி எண் : ____________________

இ-மெயில் முகவரி : ____________________

ஏகான் ஆயுள் காப்பீட்டு கம்பெனி லிமிடெட்டால் ("கம்பெனி") வழங்கப்பட்ட ____________________ என்ற எண் கொண்ட பாலிசியை வைத்திருக்கின்ற____________________ ஆகிய நான் இதன் மூலம் மேலே கூறிய பாலிசி வழியாகக் கிடைக்கக் கூடிய உரிமை மற்றும் பலன்களை உரிமையை மாற்றிப் பெறுபவருக்கு முழுமையாக மாற்றித் தருகின்றேன்.

(அல்லது)

கீழ்வரும் நிகழ்வுகளின் போது பாலிசி உரிமை மீண்டும் எனக்குத் தரப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நான் பாலிசியை மாற்றிப் பெறுபவருக்கு மாற்றித் தருகிறேன்.

a. ____________________

b. ____________________

பாலிசியை மாற்றித் தருவதற்கான காரணங்கள்:

- உரிமையை மாற்றிப் பெறுபவர் எனக்கு வழங்கிய ரூ.____________ (மதிப்புமிக்க சலுகை) தொகையைப் பெற்றுக் கொண்டதால் பாலிசி மாற்றித் தரப்படுகின்றது. அல்லது
- இயல்பான அன்பு மற்றும் பாசம் காரணமாக ____________ (பாலிசிதாரருக்கு என்ன உறவு என்று குறிப்பிடவும்) என்பவருக்கு பாலிசி மாற்றித் தரப்படுகின்றது
- ____________________ என்ற காரணத்திற்காக எந்தச் சலுகையும் பெறாமல் பாலிசி மாற்றித் தரப்படுகின்றது

இந்த ஒப்புதல் அங்கீகாரம், நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் மாற்றித்தரும் செயல் முழுமை பெறும் என்றும் செயல்பாட்டுக்கு வரும் என்றும் நான் புரிந்து கொண்டுள்ளேன். இந்த மாற்றித்தரும் செயல் பற்றிய எழுத்துப்பூர்வமான அறிவிப்பு மற்றும் மேலே கூறிய ஒப்புதல் அங்கீகாரம் அல்லது காப்பீட்டு ஆவணம் அல்லது உரிமை மாற்றித் தருபவரும் / உரிமை மாற்றிப் பெறுபவரும் சரியானது என்று சான்றளித்த ஒரு நகல் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற ஏஜென்ட் சான்றளித்த நகல் கம்பெனியின் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரும் வரை இது கம்பெனிக்கு மாற்றாக நடைமுறைக்கு வராது.

உரிமையை மாற்றிப் பெற்றவர் பாலிசியின் கீழ் பலன்களை பெறுதல் என்பது செல்லத்தக்கது மற்றும் கம்பெனிக்கு அது கடமை நிறைவேற்றம் என்று நான் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த____________ மாதத்தின்____________நாளில் ____________ ஆண்டில் ____________என்ற இடத்தில் இந்த உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டது.

குறிப்பு: உரிமையை மாற்றிப் பெறுபவர் சட்டப்பூர்வ வயதை எட்டாதவர் (மைனர்) என்றால், நியமனதாரர் ஒப்புதல் படிவத்தை தயவுசெய்து பூர்த்தி செய்து தரவும். அந்தப் படிவத்தில் நியமிக்கப்படுபவரும் பாலிசிதாரரும் கையொப்பம் இட்டிருக்க வேண்டும். இந்தப் படிவத்தை உரிமை மாற்றித் தருவதற்கான அறிவிப்புப் படிவத்துடன் இணைத்துத் தர வேண்டும்.

**உரிமையை மாற்றிப் பெறுபவரின் விவரங்கள்:** ***( உரிமை மாற்றிப் பெறுபவருக்கு பான் கார்டு நகல் கட்டாயம் அவசியமாகிறது)***

(முற்றுரிமையான உரிமை மாற்றம் கம்பெனி / அறக்கட்டளை / நிறுவனம் ஆகியவற்றுக்கு அளிக்கப்படாமல் ஒரு தனிநபருக்கு வழங்கப்படும் என்றால் கீழ்வரும் விவரங்களைத் தர வேண்டியது கட்டாயமாகும்).

தொழில்: ☐ மாதச் சம்பளம் வாங்குபவர் ☐ விவசாயி ☐ இல்லத்தரசி ☐ மாணவர்

☐ ஓய்வு பெற்றவர் / ஓய்வூதியம் பெறுபவர் ☐ சொந்தமாக வர்த்தகம் செய்பவர் சுயதொழில் செய்பவர் ☐ சுயதொழில் செய்பவர் ☐ பிற

அடையாளச் சான்;று: ☐ பாஸ்போர்ட்t ☐ பான் அட்டை ☐ வாக்காளர் அடையாள அட்டை ☐ பிற

முகவரிச் சான்று: ☐ தொலைபேசி ரசீது ☐ ரேஷன் அட்டை ☐ மின்சாரக் கட்டண ரசீது ☐ பிற

நீங்கள் ஒரு: ☐ இந்தியாவில் வசிக்கும் இந்தியக் குடிமகன் ☐ இந்தியாவில் வசிக்காத இந்தியக் குடிமகன் ☐ பிற

தொலைபேசி எண்கள்: வீடு: ____________ அலுவலகம்: ____________ மொபைல்: ____________

இ-மெயில் ஐ.டி: ____________________

முகவரி:____________________

உரிமை மாற்றித்தரப்படும் நிலையில் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய கே.ஒய்.சி / ஏ.எம்.எல் ஆவணங்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. தேதி: ____________

| | | |
|---|---|---|
| உரிமையை மாற்றித் தருபவரின்/ கையொப்பம்/ பெருவிரல் கை ரேகை பதிவு / முத்திரை | உரிமையை மாற்றித் தருபவரின்/ கையொப்பம்/ பெருவிரல் கை ரேகை பதிவு / முத்திரை | சாட்சியின் கையெழுத்து |

AEGON Life

## சாட்சியின் உறுதிமொழி

உரிமையை மாற்றித் தருபவர் உரிமை மாற்றித் தரும் படிவத்தை கையெழுத்திட்டு நிறைவேற்றி உள்ளார். கையெழுத்து / பெருவிரல் கைரேகை பதிவு இவை உரிமை மாற்றித் தருபவர் மற்றும் உரிமை மாற்றிப் பெறுபவர்களுடையதுதான். மேலே கூறிய தேதியில் மற்றும் இடத்தில் கையெழுத்து போடபப்பட்டது / பெருவிரல் கைரேகை பதிவு செய்யப்பட்டது.

சாட்சியின் முழு பெயர்: திரு./ திருமதி.: ____________________

(முதல் பெயர்) (நடுவில் உள்ள பெயர்) (இறுதிப் பெயர்)

சாட்சியின் முகவரி: ____________________

____________________

## பிராந்திய மொழிக்கான உறுதிமொழி

படிவத்தில் உரிமையை மாற்றித் தருபவர் / உரிமையை மாற்றிப் பெறுபவர் பிராந்திய மொழியில் கையொப்பம் இட்டு இருந்தால் அல்லது பெருவிரல் கைரேகை பதிவு செய்திருந்தால் இந்த உறுதிமொழி கட்டாயம் ஆகும்.

உரிமை மாற்றுப் படிவத்தில் உள்ள விஷயங்களை உரிமையை மாற்றித் தருபவருக்கு அவரது அல்லது அவர்களின் விருப்பத்துக்கேற்ப ____________________(மொழி) விளக்கமாக கூறி உள்ளேன். உரிமையை மாற்றித் தருபவர் விஷயங்களை முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளார்.

உறுதிமொழி அளிப்பவரின் பெயர்: ____________________

____________________
உறுதிமொழி அளிப்பவரின் கையொப்பம்

இடம்:____________________ தேதி: | தே | தே | மா | மா | வ | வ | வ | வ |

## வழிகாட்டி நெறிமுறைகள்

1. உரிமையை மாற்றிப் பெறுபவர் தனிநபராக இருந்தால் அவரின் முழுமையான பெயர், வயது, உறவுமுறை, முகவரி ஆகியவற்றைத் தர வேண்டும்.
2. உரிமை மாற்றித் தரும் இந்த அறிவிப்பை பாலிசியின் மூல ஆவணத்துடன் இணைத்து தர வேண்டும்.

✓ முற்றுரிமை மாற்றித் தருதல்

உரிமையை மாற்றிப் பெறுபவருக்கு எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் அனைத்து உரிமைகள், நலன்கள், பாத்தியம் மற்றும் கடப்பாடுகளை மாற்றித்தருவதை இது குறிக்கிறது. பாலிசியை முற்றுரிமையாக பாலிசியை மாற்றித் தருபவர் அளித்துவிட்டால், மாற்றிப் பெறுபவர் "பாலிசி உரிமைதாரர்" ஆகிவிடுகிறார். ஆனால் இதற்கு பாலிசியை மாற்றிப் பெறுபவர் வருங்காலங்களில் பிரீமியங்களைச் செலுத்த ஒத்துக் கொண்டிருக்க வேண்டும். பாலிசியின் கீழ் அனைத்து உரிமைகளும் கடப்பாடுகளும் உரிமையை மாற்றிப் பெறுபவருக்கு மாற்றப்படும். முற்றுரிமை மாற்றித் தருதலைப் பொறுத்து ஏற்கனவே செய்த வாரிசுதாரர் நியமனம் தானாகவே ரத்து ஆகிவிடும். உரிமையை மாற்றிப் பெறுபவர் வாரிசுதாரரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்.

நிபந்தனைக்குட்பட்ட மாற்றித் தருதல்: மாற்றித் தரும் செயலின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு உரிமையைப் பெறுபவருக்கு உரிமைகளையும் கடப்பாடுகளையும் மாற்றித் தருவதை இது குறிக்கிறது.

3. உரிமை மாற்றித் தரும் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு கம்பெனிக்கு வழங்கப்படாத வரை உரிமை மாற்றல் என்பது நடைமுறைக்கு வராது; கம்பெனியின் முந்தைய நலனுக்கு மாறாக இருக்காது. இந்த உரிமை மாற்றுதல் செல்லுபடியாக பாலிசி ஆவணம் ஒப்புதல் அங்கீகாரம் பெற்றாக வேண்டும்.

4. திருமணமான பெண்களுக்கான சொத்துச் சட்டம் 1874ன் கீழ் வழங்கப்பட்ட பாலிசிகளுக்கு உரிமையை மாற்றித் தருதல் செல்லுபடியாகாது. உரிமை மாற்றித் தரும் செயல் மேற்கொண்ட உடனேயே, அதாவது பாலிசி ஆவணத்தில் ஒப்புதல் அங்கீகாரம் செய்யப்படுதல் அல்லது உரிமை மாற்றுதலுக்கான பத்திரம் பதிவு செய்யப்படுதல் மேற்கொள்ளப்பட்ட உடனேயே பாலிசி / உரிமை மாற்றலுக்கான பத்திரத்துடன் பாலிசி கம்பெனிக்கு அதன் குறிப்பிட்ட அலுவலகத்துக்கு உரிமை மாற்றுதலைப் பதிவு செய்து கொள்வதற்காக அனுப்பப்பட வேண்டும்.

5. பகுதியளவு உரிமை மாற்றுதல் என்பது அனுமதிக்கப்பட மாட்டாது. ஒரு பாலிசிக்கும் அதிகமாக உரிமை மாற்றுதல் செய்தால், தயவுசெய்து தனித்தனியான உரிமை மாற்றல் படிவங்களைப் பயன்படுத்தவும்.

6. உரிமையை மாற்றிப் பெறுபவர், சட்டப்பூர்வ வயதை அடையாதவராக இருந்தால் (மைனர்), நியமனதாரர் ஒப்புதல் படிவத்தை நிரப்பி பாலிசிதாரர் மற்றும் நியமனதாரரின் கையொப்பத்தைப் பெற வேண்டும். இதனை உரிமை மாற்றித்தரும் படிவத்துடன் இணைத்துத் தர வேண்டும்.

7. உரிமை மாற்றலின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உரிமை மாற்றம் செய்யப்பட்ட பிறகு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள உரிமை மாற்றிப் பெறுபவரை பாலிசியின் கீழ் பொருந்திவரக் கூடிய பலன்களைப் பெறத் தகுதி பெற்ற நபராக கம்பெனி அங்கீகரிக்கும்.

8. உரிமை மாற்றமானது நிதி நிறுவனம் / வங்கி / நிதிசார்ந்த கம்பெனிக்கு அல்லது ஏனைய கார்ப்பரேட் நிறுவனத்துக்கு சாதகமானதாக இருந்தால், கையொப்பமிட்டவரின் முத்திரையும் கையெழுத்தும் கொண்ட செல்லத்தக்க மறுபயன் சான்றாதாரம் கட்டாயமானதாகும். உரிமை மாற்றலின் சட்டப்பூர்வத்தன்மை அல்லது செல்லுபடியாகும் தன்மை குறித்து கம்பெனி எந்த அபிப்பிராயத்தையும் தெரிவிக்காது. தேவைப்பட்டால் கம்பெனி கூடுதலான ஆவணங்கள் / விவரங்களைக் கேட்டுப் பெறும்.

9. சாட்சி மற்றும் உறுதிமொழி அளிப்பவர் வேறு வேறு நபராக இருக்க வேண்டும். செல்லத்தக்க ஒப்பந்த ஆவணத்தில் ஈடுபடத்தகுதி உள்ளவராக இருக்க வேண்டும்.

**மறுப்புரை**

"மொழி பெயர்க்கப்பட்ட இந்தப் படிவத்தின் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்வதில் ஏதேனும் முரண்பாடு இருக்கும் பட்சத்தில், 29 ஏப்ரல் 2014 அன்று தேதியிட்ட ஐ.ஆர்.டி.ஏ.ஐ சுற்றறிக்கை எண்: IRDAI/Life/Life Council/2013/73-ன்படி இந்தி / ஆங்கிலத்தில் அச்சிட்ட படிவத்தின் (தேவைப்படும் பட்சத்தில்) அர்த்தமே கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும்."